நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாற**

நாள் - 09.02.2024 STC. 305 /2023 அ.சா.1 பாஸ்கர், த-பெ.மாரிமுத்து

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**......**

1) மாமா ராமு வீட்டின் முகவரி என்ன என்றால் மேலத்தெரு, வளப்பகுடி மோட்டு தோப்பு, திருவையாறு. நான் திருப்பூரில் எந்த காலத்தில் இருந்து எந்த காலம் வரை இருந்தேன் என்றால் எப்போது வேண்டுமானாலும் கம்பெனி வேலை விசயமாக செல்வேன், வருவேன் குறிப்பிட்டு காலம் சொல்ல இயலாது. கடைசியாக எப்போது சென்றேன் என்றால் போன வருடம் தீபாவளி முடிந்து சென்று வந்தேன். திருப்பூரில் எனக்கு நிரந்தரமான முகவரி கிடையாது. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் திருப்பூர் முகவரி கொடுத்துள்ளேன். 20.02.2021 ல் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். பணம் என்னிடம் கேட்ட தேதி என்ன என்றால் தேதி தெரியவில்லை, ஆனால் 2 நாட்களுக்கு முன் கேட்டார்.

2) நான் பணம் தருவது சாதாரண வட்டிக்கு ஆகும். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ குறிப்பிட்டு என்ன காரணத்திற்காக பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. பலமுறை நான் சென்று கேட்டபோதெல்லாம் வட்டியும், அசலும்தான் கேட்டேன். எனக்கு காசோலை கொடுத்தது எங்கு வைத்து கொடுத்தார் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். காசோலை கொடுத்த அன்றே வசூலுக்கு வங்கியில் போட்டேனா என்றால் இல்லை. நீங்கள் எந்த தேதியில் காசோலையை வங்கியில் செலுத்தினீரகள் என்பதற்கான செலான் (Counter Foil) கொடுத்துள்ளீரகளா என்றால் இல்லை.

3) எதிரியின் குடும்பத்தைபற்றி எனக்கு நன்றாக தெரியும். எனது குடும்பத்தைபற்றியும் எதிரிக்கு நன்றாக தெரியும். எதிரியின் மனைவி காமாட்சியின் தங்கை அபீதா என்பவரை எனக்கு தெரியும். அபீதாவை எதிரியிடம் சென்று எனக்கு பெண் கேட்டேன் என்றால் சரியல்ல. எனது அம்மாவும், எதிரியின் அப்பாவும் உறவுமுறை ஆவார்கள். பிறந்ததிலிருந்து அனைத்து விபரங்களும் எங்கள் குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் தெரியும். புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியை எனக்கு நண்பர் என்றும், 10 வருட பழக்கம் என்றும் குறிப்பிட்டுள்ளேன்.

4) எனது வங்கி கணக்கு, பெயர் Indian Bank, Thirukkattupalli Branch அதன் கணக்கு எண்.872136121 ஆகும். எதிரியின் வங்கி கணக்கு, கிளை Equitas Small Finance Bank, அருள்புரம் கிளை, கணக்கு எண் ஞாபகம் இல்லை. போதிய பணம் இல்லை என்று வங்கியிலிருந்து குறிப்பு வந்த பிறகு எத்தனை முறை எதிரியிடம் சென்று பணம் கேட்டேன் என்றால் போனில் கேட்டேன். நேரில் சென்று கேட்டேனா என்று ஞாபகம் இல்லை. மேற்படி காசோலையானது போதிய பணம் இல்லை என்றுதான்

திருப்பப்பட்டுள்ளது. வேறு காரணங்களுக்காக திருப்பப்படவில்லை. 2 லட்ச ரூபாய் பணத்தை திருப்பி கொடுப்பதற்கு எதிரிக்கு போதிய வசதி வாய்ப்புகள் உள்ளதா என்றால் தெரியாது.

5) நான் தாக்கல் செய்துள்ள புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பிலோ எந்த தேதியில் கொடுத்து போட சொன்னார் என்று சொல்லியுள்ளேனா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லி உள்ளேன். நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதி கொரோனா காலம் ஆகும். அப்போது யாரிடமும் பண புழக்கம் இல்லை என்றால் சரிதான். 2022 ஆம் தேதி நான் மற்றும் எதிரி ஆகியோர் கம்பெனிமூலமாக சுற்றுலா சென்றோம். அப்போது நான் பணம் சம்மந்தமாக எதிரியிடம் கேட்கவில்லை. நான் டைலராக கடை வைத்திருந்தேன். எந்த வருடத்தில் கடையை காலி செய்தேன் என்று தெரியவில்லை. கம்பேனியில் சுமார் 15 வருடங்களாக வேலை செய்து வருகிறேன். எனக்கு மாதம் சுமார் ரூ.20,000/-க்கு மேல் சம்பாதிப்பேன். எதிரியின் மனைவி காமாட்சியின் தங்கை அபீதாவை பெண் கேட்டு தராததால் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தில் காசோலை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கிற்காக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி பணம் கொடுக்க வேண்டிய கடமையுடையவர் அல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரிலும் பலமுறை வட்டியும், அசலும் கேட்டேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,

மறு விசாரணை இல்லை.

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)